# LAPORAN LIPUTAN MEDIA HARIAN
# AHAD 15 JANUARI 2023

| BIL | TAJUK KERATAN AKHBAR | KEMENTERIAN / JABATAN / AGENSI |
|---|---|---|
| 1.<br>2. | GOODS PRICE HIKE CRISIS, NEWS, MAKKAL OSAI -13 & 16<br>EGG SHORTAGE ISSUE LIKELY RESOLVE WITHIN 3 MONTH, WEST MALAYSIA, SEE HUA DAILY NEWS -2 | LAIN-LAIN |

UKK MAFS

UNIT KOMUNIKASI KORPORAT
KEMENTERIAN PERTANIAN DAN KETERJAMINAN MAKANAN
(UNTUK EDARAN DALAMAN MAFS, JABATAN DAN AGENSI SAHAJA)

| | | | |
|---|---|---|---|
| Headline | Goods price hike crisis | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 15 Jan 2023 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 13,16 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 1669 cm² |
| Journalist | N/A | AdValue | RM 10,924 |
| Frequency | Daily | PR Value | RM 32,773 |



முன்பு 50 ரிங்கிட்டிற்கு அதிகமான மளிகைச் சாமான்களையும் காய்கறிகளையும் வாங்க முடிந்தது

சாதாரண குடும்பத்திற்கு உணவுப்பொருட்களை வாங்க ஒருமுறைக்கு 300 ரிங்கிட் வேண்டும்

நிதிச் சுமையால் சராசரி குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் சரிவு காணும் நிலை வரலாம்

மக்களின் வாங்கும் சக்தியும் விலை உயர்வு காரணமாகக் குறைந்துகொண்டே போகிறது

# 10 ரிங்கிட்போல் ஆனது 100 ரிங்கிட்

## வாழ்க்கைச் செலவினம் குறைய வழி உண்டா?

விலைவாசி தொடர் உயர்வு எதிரொலி

● எம்.எஸ். மலையாண்டி

**மக்களின் வாங்கும் சக்தி குறைந்துகொண்டே வருவதால் பெரும்பாலான மக்கள் தற்போது ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. பொருட்கள் விலை உயர்ந்து கொண்டே போகும் காரணத்தினால் மக்களின் வாங்கும் சக்தியும் குறைந்துவருவதாகப் பயனீட்டாளர் அமைப்புகள் கூறுகின்றன.**



இதற்கு முன்பு வாங்கிய பொருட்களுக்குச் செலவிடப்பட்ட தொகையைவிட இப்போது அதே பொருட்களுக்கு அதிகமான பணத்தைச் செலவிட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை உணர முடிவதாகப் பெரும் பகுதி பயனீட்டாளர்கள் கருத்துரைத்தனர்.

விலைவாசி உயர்ந்துகொண்டே போகும் காரணத்தினால் அன்றாடக் குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாக பயனீட்டாளர்கள் கூறுகின்றனர்.

**முன்பு 50 ரிங்கிட் போதும்**

விலைவாசி இந்தளவுக்கு உயர்ந்திருக்காத காலகட்டத்தில் 50 ரிங்கிட்டிற்கு அதிகமான மளிகைச் சாமான்களையும் காய்கறி, மீன் போன்றவற்றையும் வாங்க முடிந்தது என்று ஷாருல் என்பவர் கூறுகின்றார்.

50 ரிங்கிட்டிற்கு அரிசி, கோழி, மீன் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை ஓரளவுக்கு நிறைவாக வாங்கிவிட முடியும். ஆனால் இன்று 50 ரிங்கிட் மட்டுமல்ல 100 ரிங்கிட்டிற்குக்கூட இப்படி நிறைவான பொருட்களை வாங்க முடியாத சூழல் உள்ளது.

300 ரிங்கிட் கொண்டு சென்றால் கூட ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. அரிசி, சீனி, சமையல் எண்ணெய் உள்ளிட்ட சில பொருட்களை இரண்டு பிளாஸ்டிக் பைகள் நிறைய பொருட்களை வாங்கினாலே 300 ரிங்கிட் தண்ணீர்போல் கரைந்துவிடுகிறது. சாமானிய மக்கள் இதை நினைத்து நினைத்து வேதனைப்படுகின்றனர் என்றும் பயனீட்டாளர்கள் கூறுகின்றனர்.



உயர்வுக்கு இதுவொரு நிரந்தரத் தீர்வாக அமையாது என்பதுதான் பல தரப்பினரின் கருத்து.

விலைவாசி உயர்வதால் பல குடும்பங்களில் நிதிச் சுமையும் அதிகரித்துள்ளது. இதோடு கடன் சுமையும் சூழ்ந்துகொள்கிறது. இவற்றையெல்லாம் கடந்துதான் செல்ல வேண்டும் என்ற ஒரு கட்டாய சூழ்நிலையை மக்கள் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

சாதாரணப் பயனீட்டாளர்கள் எனும் முறையில் பொதுமக்களுக்கு விலைவாசி உயர்வு ஒரு சுமைதான் என்பதை மறுக்க முடியாது. ஆனால் இதைத் தவிர்க்கவும் முடியவில்லை. சாப்பிடுவதற்கு உணவுப் பொருட்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கித்தானே ஆக வேண்டும் என்ற நிலைதான் இப்போதைக்கு உள்ளது.

**முன்பு 100 ரிங்கிட் போதும்**

இப்போதெல்லாம் பொருட்களின் விலைவாசி ராக்கெட்போல் உயர்கிறது. இதன் காரணமாக பொருட்கள் வாங்க 100 ரிங்கிட் கொண்டுசென்றால் அது ஏதோ 10 ரிங்கிட்டைக் கொண்டு செல்வதுபோல் இருக்கிறது என்ற மனநிலையில்தான் பெரும்பாலான பயனீட்டாளர்கள் உள்ளனர்.







டுரோலி எனப்படும் சரக்குத் தள்ளு வண்டியில் நிறைய பொருட்களை வாங்க முடியாத நிலையைப் பல பயனீட்டாளர்கள் இன்று எதிர்நோக்கி வருகின்றனர்.

**மனநிறைவு இல்லை**

மளிகைக்கடையில் இருந்தோ, மினி மார்க்கெட்டில் இருந்தோ அல்லது பேரங்காடியில் இருந்தோ பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தால் சுமார் 300 ரிங்கிட்டிற்கு என்னென்ன பொருட்கள் வாங்கினோம் என்று உற்றுப்பார்த்தால் வாங்கினாலே அதற்கே 300 ரிங்கிட் செலவாகிவிடுவதை உணர முடிகிறது. பணத்திற்கு மதிப்பில்லையா என மனம் எண்ணத் தோன்றுகிறது என்று பயனீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.







**என்ன தீர்வு?**

தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பள விகிதத்தை அரசாங்கம் உயர்த்தியிருந்தாலும் விலைவாசி

சமையல் எண்ணெய், காய்கறிகள், பழங்கள் போன்ற பொருட்களின் விலை அதிகரித்து வருவதால் மக்களின் வாங்கும் சக்தியும் குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு 100 ரிங்கிட்டில் நிறைய பொருட்களை வாங்க முடிந்தது. ஆனால் இப்போது அதுபோன்ற நிலை இல்லை. இந்நிலை எப்போது மாறும் என்பதுதான் பொதுமக்களின் கேள்வியாக உள்ளது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடும்பத்திற்கு சமையல் எண்ணெய், அரிசி,



Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | Goods price hike crisis | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 15 Jan 2023 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 13,16 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 1669 cm² |
| Journalist | N/A | AdValue | RM 10,924 |
| Frequency | Daily | PR Value | RM 32,773 |

**16ஆம் பக்கம் பார்க்க...**

விலைவாசி தொடர் உயர்வு எதிரொலி...

கோழி முட்டை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வாங்க 50 ரிங்கிட் போதும் என்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது அந்நிலை தலைகீழாக மாறிவிட்டது.

**பற்றாக்குறை**

விலைவாசி ஒருபுறமிருக்க சில பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கிலோ பாக்கெட் சமையல் எண்ணெய், கோழி முட்டைகள் போன்றவற்றுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனைச் சமாளிக்க இந்தியாவிலிருந்து கோழி முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதாக விவசாயம், உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் முகமட் சாபு கூறியிருக்கிறார். இது ஒரு தற்காலிக நடவடிக்கையாக அமைகிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தற்போதைக்குத் தமிழ்நாடு, நாமக்கல்லில் இருந்து கோழி முட்டைகளை இறக்குமதி செய்வது என அரசாங்கம் முடிவுசெய்து அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுமட்டுமன்றி இதர பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவும் வேளையில் அதற்குத் தீர்வு காணும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**சுமையைக் குறைக்க நடவடிக்கை**

விலைவாசி உயர்வால் பி40 தரப்பைச் சேர்ந்த மக்கள்தாம் கூடுதலான நிதிச் சுமையை எதிர்நோக்கிவருவதை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதைக் கருதி அவர்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் நோக்கத்தில் ஒரு புதிய திட்டத்தை அரசாங்கம் அறிமுகம் செய்யவிருக்கிறது என்று உள்நாட்டு வர்த்தக வாழ்க்கைச் செலவினத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சலாஹுடின் அயூப் தெரிவித்துள்ளார்.

ஏழை மக்களுக்காக பாயோங் ரஹ்மா எனும் திட்டத்தை அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இத்திட்டத்தின் கீழ் உணவுக்கூடைகள், மலிவுவிலை பொருள் விற்பனை உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாடு முழுவதும் கட்டங்கட்டமாக ஏழை மக்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். மலேசிய புள்ளி விவரத்துறையின் அறிக்கையின்படி கிட்டத்தட்ட 130,000 பேர் பரம ஏழைகளாக இருப்பது தெரியவருகிறது.

இவர்களுக்கு உதவும் வகையில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டால் அது அவர்களின் நிதிச் சுமையை ஓரளவு குறைக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

**வாழ்க்கைத் தரம் சரிவு**

வாழ்க்கைச் செலவின உயர்வு காரணமாகக் குறைந்த வருமானத்தைப் பெறக்கூடிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும் சூழ்நிலையும் இருப்பதை அரசாங்கம் கருத்தில்கொண்டு தொடர்ச்சியாக இதுபோன்ற உதவித்திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. குறைந்த வருமானப் பெறக்கூடிய சூழ்நிலையில் வாழ்க்கைச் செலவினம் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போனால் சம்பந்தப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் நிச்சயமாகச் சரிவுகாணும் என்பதை நிபுணர்களும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவின உயர்வுக்கு ஏற்ப வருமானம் உயராத சூழ்நிலையில் மக்களை நிதிச் சுமைகள் சுற்றிவளைக்கும் ஆபத்தும் உள்ளது. வாழ்க்கைச் செலவினப் பிரச்சினைக்கு அரசாங்கம் இன்னும் சிறந்த தீர்வுகளைக் காண வேண்டும். இல்லையேல் மக்களின் நிதிச் சுமை நீடிக்குமே தவிர அதற்கு முற்றுப்புள்ளி ஏற்படாது.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவினப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளித்துவரும் வேளையில் இப்பிரச்சினை விரைவில் ஒரு முடிவுக்கு வரும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

Powered by: isentia

| | | | |
|---|---|---|---|
| Headline | Egg shortage issue likely resolve within 3 months | | |
| MediaTitle | See Hua Daily News | | |
| Date | 15 Jan 2023 | Color | Full Color |
| Section | West Malaysia | Circulation | 63,549 |
| Page No | 2 | Readership | 190,647 |
| Language | Chinese | ArticleSize | 196 cm² |
| Journalist | N/A | AdValue | RM 2,198 |
| Frequency | Daily (EM) | PR Value | RM 6,593 |



# 雞蛋供應不足問題 料兩三個月內解決

**（新山14日讯）市场上出现鸡蛋供应不足，导致蛋价上涨情况，国内贸易及生活成本部长拿督斯里沙拉胡丁阿育表示，预计鸡蛋供应问题将在未来2至3个月内得到解决。**

「国内贸易及生活成本部在这个问题上一直与农业和粮食安全部合作，因为这个鸡蛋问题源於农民面临的问题。」

他说，货物供应问题仍在控制之中，只是在部分地区发生。

沙拉胡丁阿育也是柔州希盟主席，今日率领希盟国州议员到访《东方日报》南马办事处，向本报同仁拜早年时，受询时这麽透露。

一同到来拜年的包括国际贸易及工业部副部长兼行动党柔州主席刘镇东、诚信党四加亭国会议员阿米诺胡达、行动党士都兰州议员曾菊恩、柔佛再也州议员廖彩彤、士乃州议员黄勃扬、公正党武吉峇都州议员张善深、诚信党柔州署理主席祖基菲里及副主席兼沙拉胡丁阿育政治秘书苏海占等，获《东方日报》南马采访主任符诗玉、高级记者锺诗雨、记者刘文聪接待。

沙拉胡丁阿育早前透露，其部门接获鸡蛋短缺投报的地区包括柔佛州的新山、森美兰州的仁保及吉打。

询及落实针对性津贴的最新进展，他表示，政府在解决鸡肉及鸡蛋供应及价格问题后，会继续探讨有关课题。



国内贸易及生活成本部长拿督斯里沙拉胡丁阿育。

Powered by: isentia